University of J

# நூல்தேட்டம்

## காலாண்டிதழ்

ஆசிரியர்: என். செல்வராஜா

# நூலகவியல் — காலாண்டுச் சஞ்சிகை

ஆசிரியர்: என். செல்வராஜா
வெளியீடு: அயோத்தி நூலக சேவைகள்

நூலகவியல் துறைசார்ந்த தகவல்களைத் தாங்கி
இலங்கையில் வெளிவரும் ஒரே தமிழ்ச் சஞ்சிகை
ஆரம்பம் செப்டெம்பர் 1985

ஆண்டுச் சந்தா: 40/-

தொடர்பு: என். செல்வராஜா, நூலகர்
இவ்லின் இரத்தினம் பல்லினப் பண்பாட்டியல் நிறுவனம்
பல்கலைக்கழக ஒழுங்கை,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.


# நூல்தேட்டம்

## விளம்பர விகிதம்

| | | |
|---|---|---|
| *முழுப் பக்கம்* | — *ரூபா:* | *400-00* |
| *அரைப் பக்கம்* | — *ரூபா:* | *250-00* |
| *12 X 6 ச. மீ.* | — *ரூபா:* | *170-00* |
| *12 X 4.5 ச. மீ.* | — *ரூபா:* | *80-00* |

- விளம்பர விகிதம், மலரின் ஒரு இதழுக்கு மாத்திரம் உரியது
- சஞ்சிகை / நூல் வெளியீடுகள் வெளியீட்டு நிறுவனங்கள், நூல் விற்பனை நிலையங்கள், அச்சகங்கள் போன்றவற்றின் விளம்பரங்கள் மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.
- விளம்பரங்கள் யாவும் சஞ்சிகையின் அட்டையின் உட்புறத்திலேயே பிரசுரிக்கப்படும்.

# நூல் தேட்டம்

மலர்: 1 இதழ்: 2 ஆடி 1990

## நுழைவாயில்

நூல் தேட்டம் காலாண்டுச் சஞ்சிகையின் இரண்டாவது இதழ் உங்கள் கரங்களில் தவழ்கின்றது. முதலாவது இதழ் வெளியாகியதை யடுத்து இலங்கையின் பல பாகங்களிலும் இருந்து கடிதங்கள் வந்த வண்ணமுள்ளன. அவற்றின் வாயிலாக இன்றைய காலகட்டத்தில் இச் சஞ்சிகையின் தேவையை நன்றாக உணர முடிகின்றது

சிலர் தமது வெளியீடு பற்றிய விபரங்கள் வெளிவரவில்லையே என்று எடுத்த எடுப்பில் அங்கலாய்த்திருக்கின்றனர். வேறு சிலர் தமது வெளியீடுகளில் ஒவ்வொரு பிரதி அனுப்பி வைத்ததுடன், அடுத்து வரும் இதழ்களில் அவை பற்றிய குறிப்புகளை பிரசுரிக்கும்படி அன்புக் கட்டளை பிறப்பித்தும் உள்ளனர். அனைவருக்கும் எமது நன்றிகள்.

இரண்டாவது இதழுடன் எமது அன்பான வேண்டுகோளையும் வாசகர்களுக்கு விடுக்க விரும்புகின்றோம். ''நூல் தேட்டம்'' வாசித்து விட்டு ஒதுக்கி வைக்கும் ஒரு சஞ்சிகையல்ல. அது பாதுகாக்கப்பட வேண்டியதொரு ஆவணமாகும். முதலாம் இதழிலிருந்து தொகுத்து வைக்கப்பட வேண்டியதொரு நூல் விபரப்பட்டியல் இதுவாகும்

எதிர்காலத்தில், எமது தமிழ் நூல் வெளியீடுகள் பற்றிய தகவல் தேடுகைக்குரியதொரு சாதனமாக இத்தொகுதி அமைய வேண்டும் என்ற நோக்கில் ஒவ்வொரு பதிவும் மிக அவதானமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதை மனதில் இருத்தி, நூல் தேட்டம் சஞ்சிகையின் உங்கள் பிரதியைப் பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும் என்ற எமது அன்பான வேண்டுகோளை விடுக்க விரும்புகின்றோம்

திருநெல்வேலி
01. 07. 1990

என். செல்வராஜா
ஆசிரியர்

# நூற்பட்டியலில் தரப்பட்டுள்ள தகவல்கள் பற்றிய சில குறிப்புகள்

இந்நூற்பட்டியலில் உள்ள நூல்கள் யாவும் பாட ஒழுங்கில் வகைப் படுத்தப்பட்டுள்ளன. ஒவ்வொரு பாடங்களின் கீழும் தலைப்புக்கள் அகர வரிசைப்படுத்தப்பட்டு தொடர் இலக்கம் வழங்கப்பட்டுள்ளன.

இப்பட்டியலில் காணப்படும் நூல் பற்றிய தகவல்கள் மூன்று பகுதி களாக உள்ளன. முதலாவது பகுதி ஆசிரியர் வெளியீட்டாளர் பற்றிய தகவல்களையும் இரண்டாவது பகுதி நூலின் பௌதிக அமைப்பு விபரங் களையும் மூன்றும் பகுதி நூலின் உள்ளடக்கம் பற்றிய சுருக்கக் குறிப் பினையும் தருகின்றன.

முதலாம் பகுதியில் முதலில் நூலின் பெயரும் அதையடுத்து நூலா சிரியர், பதிப்பாசிரியர். தொகுப்பாளர் மொழிபெயர்ப்பாளர் போன்ற நூலின் ஆக்கத்துக்குப் பொறுப்பானவர் பற்றிய தகவலும் தரப்பட்டுள் ளன. அதனை அடுத்து வெளியிட்ட இடமும் வெளியீட்டாளர் முகவரியும் தரப்பட்டுள்ளன. ஆசிரியரே வெளியீட்டாளராகக் காணப்படுமிடத்து வெளியிட்ட இடமும், இயலுமாயின் முகவரியும் தரப்படும். தொடர்ந்து. குறித்த நூல் எத்தனையாவது பதிப்பாக வெளிவந்ததென்றும், எந்த ஆண் டில் அப்பதிப்பு வெளியிடப்பட்டது என்றும் தரப்பட்டிருக்கின்றன. இதை யடுத்து அடைப்புக் குறிக்குள் அச்சகத்தின் விபரம் காணப்படுகின்றது.

இரண்டாவது பகுதியில் உள்ள தகவல்களில் முதன்மையானது பக்கங்களாகும் பக்கங்கள் மூவகைப்படும். ரோமன் இலக்மத்தில் காணப் படும் பக்கங்களின் எண்ணிக்கை அதே இலக்கத்தில் தரப்பட்டுள்ளது. உதாரணம் IV. பக்கங்கள் எண்ணிடப்படாதவிடத்து அவை எண்ணப் பட்டு அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ளன. அதையடுத்து அரபு இலக் கங்கள் தரப்பட்டுள்ளன. பக்கங்களை அடுத்து அந்த நூலில் விளக்கப் படங்கள், வரைபடங்கள் அட்டவணைகள் தகடுகள் வண்ணப்படங்கள் என்பன காணப்படுகின்றனவா என்ற குறிப்பும் நூல் எவ்வாறு மட்டை கட்டப்பட்டுள்ளது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. கம்பி இழை (Stapled), நூல் இழை-குத்திக்கட்டல், நூல் இழை- கோர்த்துக்கட்டல் ஆகிய மூன்று வகையாக ஈழத்து நூல்கள் மட்டை கட்டப்படுவதுண்டு. இத்தகவலை அடுத்து நூலின் விலை விபரம் தரப்பட்டுள்ளது. இலங்கை வெளியீடுக ளுக்கு ரூபா சதத்திலும், இந்தியா மற்றும் பிறநாட்டு வெளியீடுக ளுக்கு அந்த நாடடு நாணயத்தின் பெறுமதியிலும் விலை குறிக்கப் பட்டுள்ளது. விலை அச்சிட்டுக் குறிக்கப்படாமல் ரபர் ஸ்டாம்ப் மூலம் அல்லது பென்சில் மூலம், நூலில் குறிப்பிடப்பட்டிருப்பின் அவ்விலை

அடைப்புக்குறிக்குள் குறிக்கப்படும். விலையே குறிக்கப்படாத நூல்களுக்கு அது பற்றிய தகவல் தரப்பட்டிருக்கும்

வர்த்தக கழிவு, நூலகக்கழிவு வழங்கப்படுவது உறுதியாகத் தெரிந்தாலன்றி அதுபற்றிய தகவல் இங்கு தரப்படமாட்டாது இரண்டாம் பகுதியில் இறுதி அம்சம் நூலின் நீள அகலமாகும். இவை சதம மீற்றரில் அளந்து குறிக்கப்படும்.

மூன்றாவது பகுதியில் நூல் பற்றிய சுருக்கமான குறிப்பு வாசகரின் தெரிவுத் தேவை கருதித் தரப்பட்டுள்ளது.

# வகுப்பாக்க ஒழுங்கு

**வகுப்புக்களை அடுத்துக் காணப்படும் இலக்கங்கள் நூற் பதிவு இலக்கங்களாகும்.**


| | | |
|---|---|---|
| 1.0 | பொது விடயங்கள் | |
| 1.1 | நூற்பட்டியல் | 51 |
| 2.0 | சமயம் | |
| 2.1 | இந்துசமயம் | 52 |
| 2.2 | இஸ்லாம் | 53 - 54 |
| 3.0 | சமூகவியல் | 55 |
| 3.1 | கல்வி | 56 - 57 |
| 3.2 | பொருளாதாரம் | 58 |
| 3.3 | நாட்டார் வழக்கியல் | 59 - 60 |
| 4.0 | மருத்துவம் | 61 |
| 5.0 | கலை | |
| 5.1 | நாடகம் | 62 |
| 6.0 | இலக்கியம் | |
| 6.1 | தமிழ் இலக்கியம் | |
| 6.1.1 | கவிதை | 63 - 72 |
| 6.1.2 | நாடகம் | 73 |
| 6.1.3 | சிறு கதைகள் | 74 - 76 |
| 6.1.4 | நாவல்கள் | 77 - 83 |
| 6.1.5 | கட்டுரைகள் | 84 - 93 |
| 7.0 | புவியியல் | 94 |
| 8.0 | வாழ்க்கை வரலாறு | 95 - 107 |
| 9.0 | வரலாறு | 108 - 112 |

## 1. 0 பொது விடயங்கள்

### 1. 1 நூற்பட்டியல்

51. இலக்கிய விருந்து/ புன்னியாமீன். கண்டி: தமிழ் மன்றம், கல்ஹின்ன. 1 வது பதிப்பு, 1987. (சென்னை: பசுங்கதிர் பதிப்பகம், 43, முத்துமாரி வீதி).

பக்கம்: 96; மட்டை: நூல் இழை - கோர்த்துக்கட்டல்; விலை: இந்திய ரூபா 61-; அளவு: 18 X 12 ச. மீ.

கண்டி, தமிழ் மன்றம் வெளியிட்ட 30 நூல்கள் பற்றிய விபரப் பட்டியல், நூலின் பௌதீக விபரங்களும் நூலின் உள்ளடக்கம் பற்றிய சுருக்கக் குறிப்பும் தரப்பட்டுள்ளன. வெளிவரவுள்ள 6 நூல்கள் பற்றிய குறிப்பும் உள்ளது.

## 2. 0 சமயம்

### 2. 1 இந்து சமயம்

52. சைவ விரதங்களும் விழாக்களும்/ ப. சிவானந்த சர்மா (கோப்பாய் சிவம்). ஆவரங்கால், புத்தூர். 1 வது பதிப்பு, 1988. (மட்டுவில் திருக்கணித நிலையம்)

பக்கம்: XVI, 152; அட்டவணை, வரைபடம்; மட்டை; நூல் இழை - குத்திக் கட்டல்; விலை 30/ ; அளவு: 12 X 17 ச. மீ.

சைவ சமயிகள் அனுஷ்டிக்கின்ற விரதங்கள், விழாக்கள், பண்டிகைகள். முதலியவற்றை விபரிக்கும் நூல். முக்கியமாக அவை ஆரம்பித்த வகை, அனுஷ்டித்துப் பயன் பெற்றவர் விபரம், இவை தொடர்பான புராணக் கதைகள் முதலியனவும் கொண்டது.

### 2. 2 இஸ்லாம்

53. அறிவும் உணர்வும்/ எம். ஐ. எம். மீரா லெவ்வை. கல்முனை: இஸ்லாமிய நூல் வெளியீட்டுப் பணியகம், சாய்ந்தமருது, 1 வது பதிப்பு 1989 (மட்டக்களப்பு: சென் ஜோசப் கத்தோலிக்க அச்சகம்)

பக்கம்; 106; மட்டை: நூல் இழை - குத்திக்கட்டல்; விலை: 30/-: அளவு: 18 X 12. 5 ச. மீ

அறிவும் உணர்வும், இறைமறை அருளப்பட்ட சூழல் பற்றிய அறிமுகம். திருக்குர் ஆனின் வாழ்க்கை வழிகாட்டும் வசனங்களில் ஒரு சில, ஆகிய மூன்று பகுதிகளாக இஸ்லாமிய கருத்துக்கள் வழங்கப்பட்டுள்ளன.

54. முஹம்மது (ஸல்) மனிதரில் தலை சிறந்தவர்கள்/ F. M. நதீம் பாரி, தமிழாக்கம் - ம மு உவைஸ் கொழும்பு 10: ஸ்ரீ லங்கா இஸ்லாமிய நிலையம் ராஜ பொக்குண, 1 வது பதிப்பு, 1986, (கொழும்பு-10: ருகுண பிரிண்டர்ஸ், 44 மாளிகாவத்தை வீதி).

பக்கம். (8). 78; மட்டை; ஸ்டேப்ளர்; விலை குறிப்பிடப்படவில்லை; அளவு 24 × 14 ச. மீ.

பாக்கிஸ்தான் அரசின் 1985 ஆம் ஆண்டு தேசிய வீரர் பரிசு பெற்ற மூலநூலின் தமிழாக்கம் நாயகம் (ஸல்) அவர்களின் நற்பண்பு களை விளக்குகின்றது.

## 3. 0 சமூகவியல்:

55. ஜீவியப்பயணம்/ யூ எல் எம். குவைலீத் நாவலப்பிட்டி: சரண்தீப் இஸ்லாமிய எழுத்தாளர் முன்னணி. 1 வது பதிப்பு, 1987.

பக்கம்: (4), 68; மட்டை: ஸ்டேப்ளர்; விலை குறிப்பிடப்படவில்லை; அளவு: 16 × 12 ச. மீ.

25 தலைப்புக்களில் ஆசிரியர் எழுதிய சமூக உளவியல் கட்டுரை களின் தொகுப்பாக உருவாக்கப்பட்டுள்ளது.

## 3. 1 கல்வி

56. ஆசிரியரும் உளவியலும்/ சபா. ஜெயராசா. இணுவில், (யாழ்ப்பா ணம்) அம்மா வெளியீடு. 1 வது பதிப்பு, 1990. (யாழ்ப்பாணம். அச்சகம் குறிப்பிடவில்லை.)

பக்கம்: (4), 50; மட்டை: நூல் இழை – குத்திக்கட்டல்; விலை: 20/– ; அளவு 18 × 12 ச மீ.

உளவியலும் கல்வியும் மிகப் பரந்த ஆய்வுத்துறைகளாக விளங் குகின்றன. வேகமாகப் பெருக்கெடுக்கும் அறிவு, மிகவும் சிக்கலடைந்து செல்லும் சமூகம் என்பவற்றின் மத்தியில் கற்றலையும் கற்பித்தலையும் எளிமைப்படுத்த, கல்வி உளவியலறிவு துணை நிற்கின்றது. கல்வி உளவி யலைப் பற்றிய விஞ்ஞான பூர்வக் கருத்துக்களை ஆசிரியர்களுக்கு இந் நூல் வழங்குகின்றது.

57. கல்விச் சிந்தனைகள்/ எஸ். எச். எம். ஜெமீல். கல்முனை: இஸ்லாமிய நூல் வெளியீட்டுப் பணியகம். 1 வது பதிப்பு, 1990. (சென்னை: 01 மில்லத் பிரிண்டர்ஸ்)

பக்கம்: 132; மட்டை: நூல் இழை- குத்திக்கட்டல்; விலை: இந்திய ரூபா 30/ ; அளவு: 17 × 12 ச. மீ.

கல்வி தொடர்பான 13 கட்டுரைகளையும் இஸ்லாம், சமூகவியல் வரலாறு ஆகியன தொடர்பான 7 கட்டுரைகளையும் கொண்ட தொகுப்பு. சில கட்டுரைகள் கிழக்கிலங்கையைப் பின்னணியாகக் கொண்டு ஆக்கப்பட்டுள்ளன.

## 3.2 பொருளாதாரம்.

58. இலங்கை அரசியற் பொருளாதார அபிவிருத்தி 1948 - 1956: வர்க்க இனத்துவ நிலைப்பாடுகள்/ வி நித்தியானந்தன். யாழ்ப்பாணம் கலைப்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். 1 வது பதிப்பு, 1990. (யாழ்ப்பாணம்: நியு ஈரா பப்ளிக்கேசன்ஸ் லிமிட்டெட்)

பக்கம்: VI, 323 மட்டை: நூல் இழை - கோர்த்துக்கட்டல்; விலை: 150/-, நூலகக் கழிவு இல்லை; அளவு: 13.5 × 20.5 ச.மீ.

இன்று இலங்கை அரசியற் பொருளாதார மட்டத்தில் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளுக்குப் பொறுப்பாகவுள்ள காரணங்களுள் வர்க்க, இனத்துவ மட்ட வளர்ச்சிகளுக்கும் மாறுபாடுகளுக்கும் பெரும்பங்குண்டு. அவை எவ்வாறு இலங்கையின் அரசியற் பொருளாதாரத்தைப் பாதித்துள்ளன என்பதை இந்நூல் விளக்குகின்றது

## 3 3 நாட்டார் வழக்கியல்.

59. நொடியும் விடையும் பாகம் 11/ கோப்பாய் - சிவம் (இயற்பெயர் பா. சிவானந்த சர்மா). ஆவரங்கால்: ஆசிரியர். 1 வது பதிப்பு, 1989. (சாவகச்சேரி: திருக்கணித அச்சகம், மட்டுவில்)

பக்கம்: 32; மட்டை: ஸ்டேப்ளர்; விலை: 10/- , நூலகக் கழிவு 15%, வர்த்தக கழிவு 20%; அளவு: 12 × 17 ச மீ.

நம்மிடையே நிலவி வருகின்ற பழைமையானதும் புதியதுமான நொடிகளின் தொகுப்பு. சிறுவர்களுக்கு உகந்தது.

60 மலைநாட்டு மக்கள் பாடல்கள்/ சி. வி. வேலுப்பிள்ளை சென்னை 17: கலைஞன் பதிப்பகம், 54, பாண்டிபஜார். 1 வது பதிப்பு, 1983. (சென்னை 17: தமிழோசை அச்சகம், 84, ஹபிபுள்ளா வீதி )

பக்கம்: 104; மட்டை; நூல் இழை - குத்திக்கட்டல்; விலை: இந்திய ரூபா 7/-; அளவு: 18 × 12 ச. மீ.

மலையகத்தில் வாய் மொழியாக வழங்கி வரும் நாட்டார் பாடல்களின் தொகுப்பு.

## 4.0 மருத்துவம்.

61. எயிட்ஸ்/ எம் கே முருகானந்தன். பருத்தித்துறை: யதார்த்தா, உதயன் புத்தகசாலை. 2 வது பதிப்பு, 1990, முதற் பதிப்பு - தை 1989 (நெல்லியடி: கலாலயா)

பக்கம்: (6), 40; விளக்கப்படம். மட்டை: நூல் இழை - குத்திக்கட்டல்; விலை: 15/-; அளவு; 18 × 12 ச. மீ.

எயிட்ஸ் நோய் தொடர்பான அடிப்படை சந்தேகங்களை நிவர்த்தி செய்யும் சுகாதாரக் கை நூல்.

## 5. 0 கலைகள்

### 5. 1 நாடகம்.

62. கலைமுகம்/ நீ. மரியசேவியர். யாழ்ப்பாணம்: திருமறைக்கலாமன்றம். 1 வது பதிப்பு, 1981. (யாழ்ப்பாணம்: ஆசீர்வாதம் அச்சகம்)
பக்கம்: (10) 94; மட்டை: நூல் இழை – குத்திக்கட்டல்;
விலை குறிப்பிடப்படவில்லை; அளவு 21 X 14 ச. மீ.

"இந்நூலில் நாடகம் சார்ந்த உயரிய கருத்துக்களை அடிகளார் நயம் பட உரைத்துள்ளார். நாடகம் பற்றிய நிறைவான கருத்துக்களையும் ஆழ்ந்த அனுபவத்தையும் கற்றறிந்த அறிவையும், கலந்து வழங்கும் உயரிய தமிழ் நூலாக இது வெளிவருகின்றது. நாடகப் பண்பை வெளிப்படுத்தும் நல்ல தமிழ் நூல்கள் தமிழில் இல்லை, என்ற குறையைப் போக்குவதாகவுள்ளது". (குழந்தை ம சண்முகலிங்கம், முன்னுரையில்).

## 6. 0 இலக்கியம்

### 6. 1 தமிழ் இலக்கியம்

#### 6. 1. 1 தமிழ்க்கவிதைகள்

63. அல் அஸூமத் கவிதைகள்: மலைக்குயில்/ அல் அஸூமத் (இயற்பெயர் அப்துள் அஸீஸ்) கண்டி தமிழ் மன்றம், கல்ஹின்ன 1 வது பதிப்பு, 1987 (கொழும்பு 12 ரோயல் பிரிண்ட்ஸ், 42 பேர்ரா ஸ்ட்ரீட்)
பக்கம்: 100; மட்டை: ஸ்டேப்ளர்; விலை: 20/-; அளவு:
18. 5 X 12 ச. மீ.

மலையக மக்களின் வாழ்க்கையை அவர்களது சோகங்களை பகைப் புலமாகக் கொண்ட கவிதைத் தொகுப்பு.

64. அழியா நிழல்கள்/ எம். ஏ. நு:மான். சென்னை: நர்மதா பதிப்பகம். 1 வது பதிப்பு, 1982 (சென்னை: சாதனை ஆர்ட் பிரிண்ட்ஸ்)
பக்கம்: 72; மட்டை: நூல் இழை – குத்திக்கட்டல்; விலை: இந்திய ரூபா 4/50; அளவு; 12 X 18 ச. மீ.

தனி மனித உணர்வுகள் சார்ந்த இருபத்திரண்டு கவிதைகளின் தொகுப்பு.

65. கல்லறை மேலான காற்று/ தொகுப்பு - சார்ள்ஸ். யாழ்ப்பாணம்: மாணவர் இளைஞர் பொது மன்றம். 1 வது பதிப்பு, 1988. (யாழ்ப்பாணம்: சித்திரா அச்சகம்.)
பக்கம்: VIII, 41, படங்கள்; மட்டை; ஸ்டேப்ளர்; விலை: 15/-: நூலகக் கழிவு 20%, வர்த்தகக் கழிவு 15%; அளவு: 21 X 14 ச.மீ.

வடமராட்சியில் நிகழ்ந்த ஒப்பரேஷன் லிபரேஷன் படுகொலைகளை நினைவு கூர்ந்து ஈழத்தின் வளரும் கவிஞர் எண்மரால் எழுதப்பட்ட கவிதைகளின் தொகுப்பு.

66. கூடைக்குள் தேசம்/ சு. முரளிதரன் கொழும்பு 6: மலையக வெளியீட்டகம் 57 மகிந்தபிளேஸ். 1 ஆம் பதிப்பு, 1988 (கண்டி:ரோயல் பிரிண்டர்ஸ், 190, கொழும்பு வீதி)
பக்கம்: (36): ஓவியங்கள்: மட்டை: ஸ்டேப்ளர்; விலை: 9/75.
நூலகக் கழிவு 15%; வர்த்தகக் கழிவு 20%; அளவு: 18X11 ச மீ.
இலங்கையில் முதன் முதல் வெளிவந்த 'ஹைற்கூ' கவிதைகள் 76 இன் தொகுப்பு. மாதிரிக்கு சில:

(1) கூடையைக் கனக்க
கனக்கச் சுமந்து சென்றார்கள்.
உள்ளே இந்த தேசம். (கவிதை இல. 1)

(2) சில்லறை விலையில்
சின்னச் சின்ன சவப்பெட்டிகள்
சிகரெட் பாக்கட்டுகள் (67 வது கவிதை)

67. சிறுவர் பாட்டு/ சாரணா கையூம். கண்டி: தமிழ் மன்றம், கல்ஹின்ன 10 வது பதிப்பு. 1983. (கொழும்பு 9: டெவலோ பிரின்ட், 69, அல்பியன் வீதி)
பக்கம்; 48; மட்டை: ஸ்டேப்ளர்; விலை: 5/-; அளவு: 18X12 ச.மீ.

8-12 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்குப் பொருத்தமான கவிதைகளை கொண்ட நூல்.

68 பலஸ்தீனக் கவிதைகள்/ தொகுப்பு எம் ஏ. நுஃமான். கல்முனை 6. வாசகர் வெளியீடு வாசகர் சங்கம். 1 ஆம் பதிப்பு 1981: (யாழ்ப்பாணம் சித்திரா அச்சகம்)
பக்கம்; VIII, 56; மட்டை: நூல் இழை - குத்திக்கட்டல்; விலை: 10/-, நூலகப் பதிப்பு 15/-; அளவு: 20 X 13 5 ச. மீ.

இந்நூல் 9 பலஸ்தீனக் கவிஞர்களின் முப்பது கவிதைகளைக் கொண்டுள்ளது. மஹ்மூட் தர்விஷ், பௌசி அல் அஸ்மார், றஷீட் ஹுசைன்

சலும் ஜுப்ரூன், தௌபீக் சையத், அன்தோய்னே கபாரு, பத்வாது கான், சமீஹ் அல் காசிம், டுயின் பசைசோ ஆகிய புகழ்பெற்ற கவிஞர்களின் கவிதைகள் இடம் பெற்றுள்ளன. பலஸ்தீனக் கவிதைகள் பற்றி கடாகர்மி என்பவர் எழுதிய கட்டுரை ஒன்றும் இடம் பெற்றுள்ளது. இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ள சமீஹ் அல் காசிமின் ஏழு கவிதைகளை மொழி பெயர்த்தவர் முருகையன் — ஏனையவற்றை மொழி பெயர்த்தவர் எம். ஏ. நுஃமான்.

69. பாலையில் வசந்தம்/ ஜின்னுஹ் ஷிரிபுத்தீன், மருதமுனை: அன்னை வெளியீட்டகம். 1 ஆம் பதிப்பு, 1989. (சென்னை: மில்லத் பிரின்டர்ஸ்)
பக்கம்: 98: மட்டை; நூல் இழை குத்திக்கட்டல்; விலை: 30/- நூலகக் கழிவு 15%; வர்த்தகக்கழிவு 10%;
அளவு: 18. 5 X 12 5 ச மீ.

திரு நபியின் வாழ்க்கையில் நடந்தனவும் முன்னோர் வாழ்வில் நடந்தனவும் மரபுக்கவிதைகளாக எழுதப்பட்டுள்ளன.

70. புலராத பொழுதுகள்/ அல் அஸுமத், கொழும்பு 12 கமல் பிரதர்ஸ் பப்ளிக்கேஷன்ஸ் 75/45 அப்துள் கமீது வீதி, 1 வது பதிப்பு 198.. (கொழும்பு 12: வீனஸ் அச்சகம், 107/18 பண்டார நாயக்கா மாவத்த)
பக்கம் (8), 66: மட்டை: நூல் இழை - குத்திக்கட்டல்; விலை: 10/-
அளவு: 18 5 X 12. 5 ச.மீ.

வெண்பாவின் பல்வேறு விகற்பங்களையும் கையாளும் கவிஞர் மலையகத்தின் வரலாற்றிலே ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தைத் தமது கவிதைப் பொருளாக எடுத்துள்ளார். உருவகக் குறுக்காவியம்.

71. மாதுளம் முத்துக்கள்/ அன்பு முகைதீன். கண்டி: தமிழ் மன்றம், கல்ஹின்ன 1 வது பதிப்பு, 1984 (கொழும்பு 9: எஸ் எச் நிலாப்தீன், டெவலோபிரின்ட் 69, அல்பியன் வீதி).
பக்கம்: 80; மட்டை: நூல் இழை - குத்திக்கட்டல்: விலை; 15/-
அளவு: 18 X 12. 5 ச. மீ.

1970 க்குப் பின்பு ஆசிரியரால் எழுதப்பட்ட பலவினக் கவிதைகளின் தொகுப்பு.

72. முத்து நகை/ ஜின்னுஹ் ஷிரிப்புத்தின் மருதமுனை: அன்னை வெளியீட்டகம் 1 ஆம் பதிப்பு; 1989. (சென்னை மில்லத் பிரின்டர்ஸ்)
பக்கம்: 144 மட்டை: நூல் இழை-குத்திக்கட்டல்; விலை: 35/- நூலக கழிவு 15%; வர்த்தகக் கழிவு 10% அளவு: 18 X 12. 5 ச.மீ.

இயற்கை அழகினை வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டிய நற்பண்புகளை நாட்டில் நடந்த வரலாற்று நிகழ்வுகளை, பாட்டாளிகளின் துன்பங்களை மரபுக்கவிதைகளாக எழுதியுள்ளார்.

### 6. 1. 2 நாடகம்

73. காத்தவராயன் நாடகம்/ பதிப்பாசிரியர், இ. பாலசுந்தரம்: யாழ்ப்பாணம்: யாழ் மாவட்டக் கலாசாரப் பேரவை, நாட்டார் கலைக் குழு. 1 வது பதிப்பு 1986 (யாழ்ப்பாணம்: புனிதவளன் கத்தோலிக்க அச்சகம்)

பக்கம்: XXX, 72, தகடுகள் 8: மட்டை: நூல் இழை - குத்திக் கட்டல்; விலை: 15/-; அளவு 42 X 26 ச.மீ.

காத்தான் கூத்து என்று வழங்கப்பட்டு வரும் நாட்டார் இலக்கிய வடிவான காத்தவராயன் நாடகத்தின் பதிப்பும் அறிமுகமும்

### 6 1. 3 சிறு கதைகள்

74. எரிகொள்ளி/ எஸ். எச் நிஃமத். எருக்கலம்பிட்டி: இலக்கிய வட்டம் 1 வது பதிப்பு, 1989. (கொழும்பு 11: பார்வை நியூஸ்பேப்பர்ஸ் அன்ட் பப்ளிக்கேசன்ஸ், 77, 3 வது குறுக்குத்தெரு)

பக்கம்: (8) 120; மட்டை: ஸ்டேப்ளர்; விலை: 30/-; அளவு: 18 X 12 ச.மீ.

12 சிறு கதைகளின் தொகுப்பு. ''பிரச்சனைகளை மட்டுமே சொல்வதும் பிரச்சினைக்குரிய தீர்வை வெளிப்படையாகச் சொல்லிவிடுவதும் நல்ல சிறு கதைகளுக்குரிய பண்புகள் அல்ல என்று நான் கருதுவதால் எனது சிறு கதைகள் பிரச்சனைகளைச் சுட்டிக் காட்டி அவற்றுக்குரிய தீர்வினை மறைமுகமாகவே சொல்கின்றன. (ஆசிரியர், தனது முன்னுரையில்)

75. சாயல்/ ஜெ. எம். சாலி. கண்டி; தமிழ் மன்றம், கல்ஹின்ன. 1 ஆம் பதிப்பு, 1983, (கொழும்பு 9: டெவெலோ பிரின்ட், 69, அல்பியன் வீதி).

பக்கம்: 68 மட்டை: ஸ்டேப்ளர்; விலை 10/-; அளவு: 18X12 ச.மீ.

தமிழக எழுத்தாளர் ஜெ. எம். சாலியின் சிறு கதைத் தொகுப்பு தீர்ப்பு, ஒட்டு, குர்பாணி, நோன்பு, கிளிமுள், கிணறு, சாயல் ஆகியன இஸ்லாமியப் பின்னணியில் எழுதப்பட்ட கதைகளாகும்.

76. தோட்டக் காட்டினிலே/ மலரன்பன், மாத்தளை சோமு, மாத்தளை வடிவேலன், மாத்தளை: தமிழ் எழுத்தாளர் ஒன்றியம், 367, பிரதான

வீதி. 1 ஆம் பதிப்பு, 1980. (யாழ்ப்பாணம்: கவின் அச்சகம், காங்கேசன்துறை வீதி.)
பக்கம்: (16), 98; மட்டை: நூல் இழை - குத்திக்கட்டல், விலை: 10/-
அளவு: 18 X 12 ச. மீ.

மலையக மக்களின் சோக வாழ்வைப் பகைப் புலமாகக் கொண்டு ஆக்கப்பட்ட சிறு கதைகளின் தொகுப்பு.

## 6. 1. 4 நாவல்கள்.

77. அவள் நெஞ்சுக்குத் தெரியும்/ எஸ். ஐ. நாகூர்கனி. (புனைபெயர்-அமுதன்). கண்டி: தமிழ் மன்றம், கல்ஹின்ன. 1 வது பதிப்பு, 1986. (மட்டக்களப்பு: கத்தோலிக்க அச்சகம்)
பக்கம்: 161, மட்டை: ஸ்டேப்ளர்; விலை: 20/-
அளவு: 18 X 12. 5 ச. மீ.

'இது'' ஜானகிக்கென்று ஒரு நெஞ்சம்'' என்ற பெயரின் 25 - 4 - 83 முதல் 11 - 6 - 86 வரை தினகரனில் வெளியான தொடர் கதையின் நூலுருவாகும். சமூக நாவல்.

78. கனவுப் பூக்கள்/ அ. ஸ. அப்துஸ் சமது. கண்டி: தமிழ் மன்றம், கல்ஹின்ன. 1 ஆம் பதிப்பு, 1983 (கொழும்பு 9: டெவெலோ பிரின்ட், 69 அஸ்பியன் வீதி)
பக்கம்: 202, மட்டை: நூல் இழை - குத்திக்கட்டல், விலை; 15/-;
அளவு: 18 X 12. 5 ச. மீ.

தினகரன் பத்திரிகையில் 1981 இல் வெளியான ''கண்ணீர் புஷ்பங்கள்'' தொடர்கதையின் நூலுரு. கலையென்றும் கல்வியென்றும் தம்மை அவற்றில் முழுமையாக ஆழ்த்திக் கொள்ளும் பெண்களின் இக்கட்டான நிலமையினைச் சித்திரிக்கும் கதை.

79. காணி நிலம் வேண்டும்/ செ யோகநாதன். சென்னை 98: நியு செஞ்சுரி புக்ஹவுஸ், 41 பி, சிட்கோ இன்டஸ்ரியல் எஸ்டேட்; 2 வது பதிப்பு, 1987, 1 வது பதிப்பு 1984, (சென்னை 5, ஸ்ரீ கன்னி அச்சகம், ஐஸ் ஹவுஸ்)
பக்கம்: VI, 116; மட்டை: நூல் இழை - குத்திக்கட்டல்; விலை: இந்திய ரூபா 10/-; அளவு: 18 X 12 ச. மீ.

காணி நிலம் வேண்டும், விலங்குகளும் கண்புதைக்கும், ஆகிய இரு குறுநாவல்கள் அடங்கியது முதலாவது நாவல் மலையகத் தமிழ் மக்களின் வாழ்க்கையை பின்னணியாகக் கொண்டு ஆக்கப்பட்டது. இரண்டாவது, 1983 இனக்கலவரங்களின் பின்னணியில் எழுதப்பட்டது.

80 கிடுகு வேலி/ செங்கை ஆழியான் (இயற் பெயர் க. குணராசா). யாழ்ப்பாணம்: யாழ். இலக்கிய வட்டம். 2 வது பதிப்பு, 1989. முதற்பதிப்பு 1984. (யாழ்ப்பாணம்: சுவர்ணு அச்சகம், கே. கே. எஸ் வீதி,)
பக்கம்: (16), 96, மட்டை: நூல் இழை - குத்திக்கட்டல்; விலை: 30/-; அளவு: 18 X 12 ச. மீ.

5 வருடங்களுக்கு முன் இருந்து யாழ்ப்பாணக் கலாசாரம் புறக் காரணங்களில் எவ்வாறு மாறுபடுகின்றது என்றும் மனித உறவுகளில் பணவசதி எப்படி மாற்றத்தைக் கொண்டு வருகின்றது என்றும் கணவன் மனைவி உறவுகள் எவ்வாறு பூசி மெழுகலினறி நேரடியாக வார்த்தைகளில் பரிமளிக்கின்ற தென்பதையும் ஆசிரியர் இந்த நாவலில் காட்டுகிறார். (கே. எஸ் சிவகுமாரன் வீரகேசரி 1.7.84)

81 பிரளயம்/ செங்கை ஆழியான் (இயற்பெயர் - க குணராசா). யாழ்ப்பாணம்: கமலம் பதிப்பகம், 2 ஆம் பதிப்பு, 1989 1 ஆம் பதிப்பு, 1975. (யாழ்ப்பாணம்: கே. ரி. அச்சகம்)
பககம்: 122; மட்டை: நூல் இழை - குத்திக்கட்டல்; விலை: 30/- அளவு: 18 X 13 ச. மீ.

1971 ஆம் ஆண்டு 'சிரித்திரன்' சஞ்சிகையில் 'மயானபூமி' என்ற தலைப்பில் தொடராக வெளிவந்தது. வீரகேசரி பிரசுரமாக 1975 ல் வெளிவந்தது. தமிழர் சமுதாயத்தின் சாதிப்பிரச்சனை தொடர்பான நாவல் ஒரு பிரதேசததின் சலவைத் தொழிலாளர் சமுகம் தனது அடிமை - குடிமை நிலையில் இருந்து விடுபடத் துடித்த உணர்வு நிலையே கதையின் கருவாகும்.

82. பெட்டிசம்/ மூலம்-வீல் குணசேகரா தமிழாக்கம் ஜுனைதா ஷெரிப். கண்டி: தமிழ் மன்றம் கல்ஹின்ன. 1 வது பதிப்பு, 1988 (மட்டக்களப்பு: சென் யோசெப் கத்தோலிக்க அச்சகம்)
பக்கம்: 80; மட்டை: ஸ்டேப்ளர்; விலை: 21/-; அளவு: 18X12.5 ச.மீ.

வீல் குணசேகராவின் 'பெத்சம' என்ற சிங்கள நூலின் தமிழாக்கம் ராஜரட்டை சிங்கள கிராம மக்களின் வாழ்க்கையைப் பகைப் புலமாகக் கொண்டு எழுதப்பட்டது. கடமை உணர்வற்ற அரச ஊழியர்களாலும் சந்தர்ப்பவாத கிராமத் தலைவர்களாலும் கல்வியறிவற்ற சிங்களக் கிராம மக்கள் ஏமாற்றப்படுவதை சித்திரிக்கும் கதை.

83. வீடற்றவன்/ சி. வி. வேலுப்பிள்ளை. யாழ்ப்பாணம்: வைகறை, 330, நாவலர் வீதி, நல்லூர். 1 வது பதிப்பு, 1981. (யாழ்ப்பாணம்: சித்திரா அச்சகம்)

பக்கம்: VI, 114; மட்டை: நூல் இழை-குத்திக்கட்டல்: விலை: குறிப்பிடப்படவில்லை: அளவு: 18 × 12 ச. மீ.

மலையகத் தோட்டங்களுக்குள் தொழிற்சங்கங்கள் வேரூன்றி விடாமல் தோட்ட நிர்வாகம் கையாண்ட அடக்கு முறைகளின் பின்னணியில் உருவான நாவல்.

## 6 1. 5. கட்டுரைகள்.

84 **இலக்கியச் சிந்தனைகள்**/ க. கைலாசபதி, யாழ்ப்பாணம்: திருமதி ச கைலாசபதி, திருநெல்வேலி. 1 வது பதிப்பு 1983. (கொழும்பு 12 குமரன் அச்சகம், 201, டாம் வீதி).
பக்கம்: (8), 144; மட்டை: நூல் இழை குத்திக்கட்டல்; விலை: 15/-; அளவு: 18 × 13 ச. மீ.

பேராசிரியர் க. கைலாசபதி எழுதிய 19 இலக்கியக் கட்டுரைகளின் தொகுப்பு.

85. **இலக்கியத் தேறல்**/ அகளங்கன் (இயற்பெயர் நா தர்மராஜா) வவுனியா: முத்தமிழ்க்கலா மன்றம்; 1 வது பதிப்பு, 1988. (யாழ்ப்பாணம்: உமா அச்சகம்)

பக்கம்: XXIV 132; மட்டை: நூல் இழை-குத்திக்கட்டல், விலை: 30/-, அளவு: 17.5 × 12 ச மீ.

சங்க இலக்கியங்கள் தொடங்கித் திரைப்படப் பாடல்கள் வரை 12 இலக்கியக் கட்டுரைகளைக் கொண்டது

86. **கம்பராமாயணக் காட்சிகள்** / சி. கணபதிப்பிள்ளை. யாழ்ப்பாணம்: முத்தமிழ் வெளியீட்டுக்கழகம் 1 வது பதிப்பு 1980. (யாழ்ப்பாணம்: ஆசீர்வாதம் அச்சகம், 50, கண்டி வீதி).

பக்கம்: XXVII, 199, தகடுகள்; விலை சாதாரண பதிப்பு 15/-, நூலகப் பதிப்பு. 20/-; அளவு: 18 × 12 ச. மீ.

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களால் எழுதப்பட்ட 38 தமிழ் இலக்கியக் கட்டுரைகளைக் கொண்டது.

87. **கலை இலக்கியத் திறனாய்வு**/ கே. எஸ் சிவகுமாரன் கண்டி: தமிழ் மன்றம். 1 வது பதிப்பு, 1989. (சென்னை: எம். ஏ பிறின்டர்ஸ், அங்கப்ப நாயக்கர் தெரு)

பக்கம்: 84; மட்டை: நூல் இழை - குத்திக்கட்டல்: விலை: 20/-; அளவு: 18 × 12 ச. மீ.

கலை இலக்கியத் துறையில் திறனாய்வு பற்றிய தகவல்களைத் தருகின்ற நூல் கல்வித் தராதரத்தில் உயர்வகுப்பு மாணவர்களுக்கும் பல்கலைக்கழகங்களில் பயில்வோருக்கும் திறனாய்வு பற்றிய அடிப்படை விளக்கத்தைத் தரக் கூடிய நூல்

88. திறனாய்வுக் கட்டுரைகள்/ எம். ஏ. நுஃமான் சிவகங்கை: அன்னம் பிரைவேட் லிமிட்டெட்; 1 வது பதிப்பு, 1985.
(மதுரை; பரணி அச்சகம்).
பக்கம்: 1̶6; மட்டை: நூல் இழை - கோர்த்துக்கட்டல்
விலை: இந்திய ரூபா 20/-; அளவு: 21 X 14 ச. மீ.

1969 முதல் 1985 வரையுள்ள காலங்களில் எழுதப்பட்ட கட்டுரை யில் கலை, இலக்கியம் தொடர்பாக 18 கட்டுரைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன கவிதை நாவல் நாடகம், சினிமா விமர்சனம் ஆகியன பற்றிய பல கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

89. மார்க்சியமும் இலக்கியமும்/ சில நோக்குகள்/ தொகுப்பும் தமிழாக்க மும் ஏ ஜெ. கனகரட்ன யாழ்ப்பாணம்: அலை வெளியீடு, 48, சுய உதவி வீடமைப்புத்திட்டம், குருநகர். 1 வது பதிப்பு, 1981.
(சாவகச்சேரி: திருக்கணித அச்சகம்).
பக்கம்: (8), 98; மட்டை: நூல் இழை - குத்திக்கட்டல்,
விலை: சாதாரண பதிப்பு 10/-: நூலகப்பதிப்பு 12/-;
அளவு: 18 X 12 ச. மீ.

நாவலும் புரட்சியும் (ஆசிரியர் அலன் ஸ்விஞ்வுட்); சோசலிச யதார்த்த வாதமும் இலக்கியக் கோட்பாடும் (ஆசிரியர் கேரி சோல் மொர் சன்) ஆகிய இரு நூல்களினதும் உருவம் உள்ளடக்கம், மார்க்சிய விமர் சனம் (ஆசிரியர் ரெஜி சிறி வர்த்தன) என்ற கட்டுரையினதும் தமிழாக்கம்.

90. முற்போக்கு இலக்கியம்/ மு தளையசிங்கம் சென்னை 14: க்ரியா, 268, இராயப்பேட்டை பிரதான வீதி, 1 வது பதிப்பு, 1984.
(சென்னை 14: Rasana offset Prints. 275 இராயப்பேட்டை பிரதான வீதி).
பக்கம்: 48; மட்டை: நூல் இழை - கோர்த்துக்கட்டல்;
விலை: இந்திய 5/-; அளவு: 18 X 12 ச. மீ.

'கலைச்செல்வி' சஞ்சிகை நடாத்திய கருத்தரங்கத் தொடருக்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கட்டுரை.

91. யௌவனம்/ தேவதாசன் ஜெயசிங் கொழும்பு 6: மலையக வெளி யீட்டகம், 57 மகிந்த பிளேஸ். 2 வது பதிப்பு, 1988. (கண்டி: யூனியன் அச்சகம்)

பக்கம்: 94; மட்டை: ஸ்டேப்ளர்; விலை: 25/-; நூலகக்கழிவு: 15%, வர்த்தகக்கழிவு 20% அளவு: 21 X 14 ச. மீ.

உயர் வகுப்பு மாணவர்களுக்கு ஏற்ற இலக்கியக்கட்டுரைகளின் தொகுப்பு.

92. வாலி/ அகளங்கன் (இயற்பெயர் நா. தர்மராஜா) யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா அச்சகம், 234 ஏ கே. கே. எஸ். வீதி, 2 வது பதிப்பு. 1989 முதற் பதிப்பு 1987. (யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா அச்சகம்)
பக்கம்: X, 86; மட்டை: ஸ்டேப்ளர்; விலை: 23/-; அளவு: 18 X 13 ச மீ.

கம்பராமாயணத்தில் வாலிவதை என்ற பகுதி புதிய கோணத்தில் பார்க்கப்படுகிறது. ஈழநாடு பத்திரிகையில் தொடர் கட்டுரையாக இது 'வாலி கொலைக்காரமும் கேள்விச்சாரமும்' என்ற தலைப்பில் 1979 இல் வெளிவந்தது.

93. வித்தியானந்தம்/ சு. வித்தியானந்தன். யாழ்ப்பாணம்: சாயிபாபா அட்வர்டைசிங் அசோசியேற்ஸ்: 1வது பதிப்பு, 1984, (யாழ்ப்பாணம் கலைவாணி அச்சகம்)
பக்கம்: XIV, 92, தகடுகள், புகைப்படங்கள்; மட்டை: நூல் இழை-குத்திக்கட்டல் விலை: குறிப்பிடப்படவில்லை; அளவு: 20 X 13 ச.மீ.

ஈழத்து தமிழ்ப்பண்பாட்டின் அமைப்புக் கோலம், அமிச விபரம் ஆகியன பற்றிப் பேராசிரியர் எழுதிய 10 கட்டுரைகளின் தொகுப்பு பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்களின் 60 வது பிறந்த நாள் நினைவு மலர்.

## 7. 0. புவியியல்.

94. திருக்கோணமலை/ கா. இரத்தினலிங்கம் திருக்கோணமலை: டர்ஷிகா கிரியேஷன்ஸ் 160 பிரதான வீதி. 1 வது பதிப்பு 1989. (யாழ்ப்பாணம்: உதயன் அச்சகம்)
பக்கம்: (8), 48; மட்டை: ஸ்டேப்ளர்; விலை: 25/-;
அளவு: 20 X 12. 5 ச. மீ.

திருக்கோணமலையின் வரலாற்றுச் சிறப்பையும் இப்பிரதேசத்தின் தொழில் வளங்கள் மற்றும் சமய சமூக கலாசாரப் பாரம்பரியங்களையும் விளக்கும் நூல்.

## 8. 0. வாழ்க்கை வரலாறு.

95. அட்டைப்பட ஓவியங்கள்/ தொகுப்பு-டொமினிக் ஜீவா. யாழ்ப்பாணம்: மல்லிகைப்பந்தல் 234 பி, கே.கே.எஸ். வீதி. 1வது பதிப்பு 1986. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ காந்தா அச்சகம், கே. கே. எஸ் வீதி)

பக்கம்: 136; மட்டை: நூல் இழை - குத்திக்கட்டல்; விலை: 20/-; அளவு: 17 X 12 ச. மீ

மல்லிகை மாத இதழில் காலத்துக்கு காலம் வெளியிடப்பட்டு வந்த கட்டுரைகளின் தொகுப்பு. ஒரு படைப்பாளி, இன்னொரு படைப்பாளியையோ அறிவு ஜீவியையோ எப்படி முதன் முதலில் சந்தித்தனர் என்பது பற்றியும் அவர்கள் நெருங்கிய தொடர்பு கொண்ட நிலை பற்றியும் பரஸ்பரம் இருவரும் ஒருவருக்கொருவர் பாதிப்புக்குள்ளாவது எப்படி என்பது பற்றியும் எழுதிய தகவல் குறிப்புரைக்கட்டுரைகள்

96. உத்தமர் உவைஸ்/ எஸ் எம். ஹனீபா. கண்டி: தமிழ்மன்றம், கல்ஹின்ன. 1 வது பதிப்பு 1981. (கொழும்பு 9: ஐ பீ. சி பிரின்டிங் பிரஸ், 320 என் எம். எம் இஷாக் மாவத்தை)

பக்கம்: 172; 8 தகடுகள், புகைப்படங்கள்; மட்டை: நூல் இழை-குத்திக்கட்டல். விலை: 20,-; அளவு: 18 X 12. 5 ச. மீ

பதினைந்து அத்தியாயங்களில் அல்ஹாஜ் கலாநிதி ம மு. உவைஸ் பற்றிய வாழ்க்கைக்குறிப்புகள் தரப்பட்டுள்ளன.

97. கைலாஸ் கைலாசபதி நினைவேடு / பதிப்பு – மௌ. சித்திரலேகா, க சண்முகலிங்கம் சி மௌனகுரு. யாழ்ப்பாணம்: பேராசிரியர் க கைலாசபதி நினைவுக்குழு, 62. பல்கலைக்கழக ஒழுங்கை, திருநெல்வேலி 1வது பதிப்பு, 1988 (யாழ்ப்பாணம்: புனிதவளன் கத்தோலிக்க அச்சகம்)

பக்கம் X 236; மட்டை: நூல் இழை கோர்த்துக்கட்டல் விலை குறிப்பிடப்படவில்லை; அளவு: 28X12 சமீ.

இலக்கியத் திறனாய்வு, சமுகவியல் கட்டுரைகள் அடங்கியது. தமிழ்க் கட்டுரைகள் 8உம் ஆங்கிலக் கட்டுரைகள் 16உம் கொண்டது. கைலாஸ் வாழ்க்கைக் குறிப்பு நாவல் இலக்கியம், மொழியியல மெய்யியல் நாடகக்கலை, மெல்லிசை. கைலாசின் ஆக்கங்களுக்கான நூல்விபரப் பட்டியல் ஆகியன தமிழ்க் கட்டுரைகளின் கருப்பொருளாகும்.

98. சாது அப்பாத்துரையின் தியான தாரா / பிரமிள். (இயற்பெயர் சிவராமலிங்கம், வேலணை). அந்தியூர் 638501 (இந்தியா); லயம் வெளியீடு, நகலூர். 1வது பதிப்பு 1989; (சென்னை: 41கவின் கலை அச்சகம்)

பக்கம்; 64, புகைப்படங்கள்; மட்டை; நூல் இழை - குத்திக்கட்டல் விலை: இந்திய ரூபா 6/-; அளவு: 18X12 சமீ.

திருக்கோணமலையின் ஞானபுருஷரான சாது அப்பாத்துரையின் வரலாறும் வாக்கும் அவர் மறைந்து 25 ஆண்டுகள் சென்ற பின்பு இந்நூலின் வாயிலாக வெளிப்படுகின்றது.

99. சி.வி. சில சிந்தனைகள் / சாரல் நாடன் கொழும்பு 6: மலையக வெளியீட்டகம், 57, மகிந்த பிளேஸ், 1ம் பதிப்பு, 1986. (கண்டி: யூனியன் அச்சகம், கொழும்பு வீதி)

பக்கம்: VIII, 72; மட்டை: ஸ்டேப்ளர்; விலை: 17.50; நூலகக் கழிவு 15%; வர்த்தகக் கழிவு: 20%; அளவு: 18X12.5 சமீ

இலக்கியப் படைப்பாளியான அமரர் சி வி. வேலுப்பிள்ளை அவர்கள் பற்றிய நூல்.

100. டொமினிக் ஜீவா - கருத்துக் கோவை / தொகுப்பு - மேமன் கவி கொழும்பு 11: மணிவிழாக்குழு (கொழும்புக்கிளை). 188/Q, செய்சர் வீதி, 1வது பதிப்பு, 1987 (யாழ்ப்பாணம்: அபிராமி அச்சகம்).

பக்கம் 76. புகைப்படங்கள்; மட்டை: நூல் இழை - குத்திக்கட்டல்; விலை: 15/-; அளவு: 18X13 சமீ.

'மல்லிகை' சஞ்சிகை ஆசிரியர் டொமினிக் ஜீவா அவர்களின் மணி விழாவையொட்டி பல்வேறு கலை இலக்கிய அறிஞர்களினால் எழுதப்பட்டு பத்திரிகைகளில் வெளிவந்த கட்டுரைகள், வானொலியில் இடம்பெற்ற சிறப்பு நிகழ்ச்சிகள், வானொலி தொலைக்காட்சி பேட்டிகள் மற்றும் கூட்டங்களின் விபரங்கள் போன்றவற்றின் தொகுப்பு.

101. துணைவேந்தர் வித்தி / அ. சண்முகதாஸ். கண்டி: தமிழ் மன்றம், கலஹென்ன. 1வது பதிப்பு, 1984. (கொழும்பு 6 சாமர அச்சகம், 22ஏ, மல்லிகா ஒழுங்கை )

பக்கம்: 134; புகைப்படம், 4 தகடுகள்; மட்டை: ஸ்டேப்ளர்; விலை: 15/-; அளவு: 18X13 சமீ.

யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தராகவிருந்த பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்களின் 60 ஆவது பிறந்ததினத்தையொட்டி 8-5-84 அன்று வெளியிடப்பட்ட நூல். 8 அத்தியாயங்களில் அவரது சமூகப பணிகள் பல்கலைக்கழக வாழ்வு பற்றி ஆராயப்பட்டுள்ளது. அவர் எழுதிய நூல்கள், கட்டுரைகள் பற்றிய விபரம் கொண்ட நூற்பட்டியல ஒன்றும பக்கம் 79 - 103 இல் காணப்படுகிறது.

10.. தேசபக்தன் கோ. நடேசையர் - ஒரு வரலாற்று ஆய்வு / சாரல் நாடன். கண்டி: மலையக வெளியீட்டகம். 1வது பதிப்பு 1988 (கண்டி: ரோயல் பிரிண்டர்ஸ், 190, கொழும்பு வீதி)

பக்கம்: 210; விளக்கப்படம்; மட்டை: ஸ்டேப்ளர்; விலை: 75/- அளவு: 21X14 சமீ.

இலங்கை வாழ் பெருந்தோட்டத் தமிழரின் கடந்த 170 வருடகால வரலாற்றில் யுகப்புயல் ஒன்றை ஏற்படுத்திய மாமனிதர் கோதண்டராம நடேசையரின் வாழ்க்கை வரலாறு.

103 பஞ்சாக்ஷரம்/ கோப்பாய் - சிவம் ஆவரங்கால், புத்தூர்: யாழ். இலக்கிய வட்டம். 1வது பதிப்பு. 1987. (மட்டுவில்: திருக்கணித நிலையம்)

பக்கம்: XVI 188; அட்டவணைகள்; மட்டை: நூல் இழை - குத்திக் கட்டல்; விலை: 25/-; நூலகக்கழிவு: 15%; வர்த்தகக்கழிவு: 20%; அளவு: 3 X 20 ச. மீ.

மறு மலர்ச்சி எழுத்தாளர் பண்டிதர் ச. பஞ்சாட்சர சர்மாவின் எழுபதாவது பிறந்த தினத்தையொட்டி அவரது வாழ்க்கைச் சிறப்புக்கள், அவரது ஆக்கங்கள் சில அவரைப்பற்றிப் பிற அறிஞர்கள் எழுதியவை என்பவற்றின் தொகுப்பு.

104. பண்டிதமணி போற்றிய யாழ்ப்பாணத்துச் சைவத்தமிழ்ப்பாரம்பரியம்/ ஆ. வேலுப்பிள்ளை. யாழ்ப்பாணம்: பண்டிதமணி நூல் வெளியீட்டுச் சபை (காரியதரிசி, அ. பஞ்சாட்சரம், உரும்பிராய் மேற்கு உரும்பிராய்). 1 வது பதிப்பு, 1989 (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).

பக்கம்: II, 40; மட்டை: ஸ்டேப்ளர்; விலை: குறிக்கப்படவில்லை; அளவு: 21 X 14 ச. மீ

இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களின் நினைவு விழாவையொட்டி ஏற்பாடு செய்யப்பட்ட நினைவுப் பேருரையின் நூல் வடிவம்

105 மகாகவி பாரதி/ எஸ் எம் ஹனிபா. கண்டி: தமிழ் மன்றம், கல்ஹின்ன 1 வது பதிப்பு, 1988 (கொழும்பு 12: குமரன் அச்சகம் 201, டாம் வீதி)

பக்கம்: 40; மட்டை: ஸ்டேப்ளர்; விலை 10/-; அளவு: 18X12 ச மீ.

மகாகவி பாரதியாரின் வாழ்க்கை வரலாறு. சிறுவர்களுக்கேற்ற வகையில் ஆக்கப்பட்டுள்ளது.

106. வித்துவ சிரோமணி கணேசையரின் வாழ்க்கையும் பணியும்/ எஸ். சிவலிங்கராஜா. யாழ்ப்பாணம்: யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை. 1 வது பதிப்பு, 1989 (யாழ்ப்பாணம்: கொமர்ஷியல் அச்சகம்)

பக்கம்: (12), 112; தகடுகள்; மட்டை: நூல் இழை - குத்திக்கட்டல்; விலை: (30,-); அளவு: 21 X 14 ச. மீ

மகாவித்துவான் சின்னையர் கணேசையர் (1878 1958) இலங்கைத் தமிழ் அறிஞர்களுள் மிகவும் முக்கியமானவர்களுள் ஒருவர். அவரது வாழ்க்கையும், பணிகளும் இந்நூலில் ஆராயப்பட்டுள்ளன. அவரின ஆக்கங்களுக்கான நூற்பட்டியல் ஒன்றும் தரப்பட்டுள்ளது.

107. ஸேர் ரூசிக் பரீத்: வழியும் நடையும்/ முஹம்மத் எம் சபர் கொழும்பு 3: அல்ஹாஜ் ஸகத் முஹமத் இர்ஷாத், அல்பரகாத்

முகாமை நிறுவனம், 17, கிளென் ஆபர் பிளேஸ்; 1வது பதிப்பு, 1982; (கொழும்பு 14: எக்ஸ்பிரஸ் நியுஸ் பேப்பர்ஸ் லிமிட்டட், 185, கிரான்ட்பாஸ் வீதி).

பக்கம்: (8) 174; தகடு; மட்டை: நூல் இழை – கோர்த்துக்கட்டல்; விலை: குறிப்பிடப்படவில்லை; அளவு: 21 X 14 ச. மீ.

சேர் ரஸிக் பரீத் அவர்களின் 90 வது பிறந்த தினக் கொண்டாட்டத்தையொட்டி வெளியிடப்பட்ட (29. 12 82) சிறப்பு வெளியீடு. 3 அத்தியாயங்களில் அவரது சமூக அரசியல் வாழ்க்கை வரலாறு எடுத்துக் காட்டப்படுகின்றது.

## 9. 0 வரலாறு

108. நல்லைநகர் நூல்/ க. குணராசா. யாழ்ப்பாணம்: பூபாலசிங்கம் புத்தகசாலை. 1வது பதிப்பு, 1987. (யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா அச்சகம்).

பக்கம்: XII 57; தகடுகள் 4; மட்டை: நூல் இழை - குத்திக்கட்டல்; விலை: சாதாரணபதிப்பு 15/-; விஷேட பதிப்பு 20/-; அளவு: 17 X 14 ச மீ.

யாழ்ப்பாண இராச்சியத்தினதும் நல்லூர் கந்த சுவாமி கோவிலினதும் வரலாற்றைக் கூறும் நூல்

109. நாடற்றவர் கதை/ சி. வி. வேலுப்பிள்ளை. Nilgiris (India); Indo-Sri Lankan Development Trust Island College 14 – 56, Club Road Kothagiri 1 வது பதிப்பு, 1987; (சென்னை 4 மிதிலா அச்சகம், 5, குச்சேரி, மைலாப்பூர்.)

பக்கம்: 62; மட்டை: நூல் இழை - குத்திக்கட்டல்; விலை: இந்திய ரூபா 6/-; அளவு: 18 X 12 ச. மீ

மலையக மக்களின் நாடற்றவர் நிலையைச் சித்திரிக்கும் நூல் 'ஈழநாடு' 25 வது ஆண்டு மலரில் (11. 2. 84) இடம்பெற்ற மலையகத் தமிழர்களின் இன்றைய பிரச்சனைகள் எனற கட்டுரையும் பின்னிணைப்பாகத்தரப்பட்டுள்ளது.

110. முத்துராச கவிராசரின் கைலாயமாலை/ பதிப்பாசிரியர்-மயிலங்கூடலூர் பி. நடராஜன், உரையாசிரியர் – இராஜராஜேஸ்வரி கணேசலிங்கம் யாழ்ப்பாணம்: சுழிபுரம் வள்ளியம்மை முத்துவேலு ஞாபகார்த்த வெளியீடு, 1 வது பதிப்பு, 1987. (யாழ்ப்பாணம்: செட்டியார் அச்சகம்)

பக்கம்: XIV 60, மட்டை: ஸ்டேப்ளர்; விலை: 5/-; அளவு: 21 X 14 ச. மீ.

முத்துராசர் கவிராசர் இயற்றிய கைலாய மாலை முதன்முதலாக 1906 ஆம் ஆண்டு, த. கைலாசபிள்ளையால் யாழ்ப்பாணத்தில் வெளியி

டப்பட்டது. கைலாய மாலைக்குப் புதிய ஒளி என்ற தலைப்பில் பதிப்பாசிரியரின் முன்னுரையும் பின்னிணைப்பாக கைலாய மாலையில் கூறப்பட்ட வரலாறு என்ற பண்டிதை திருமதி இ.கணேசலிங்கம் அவர்களின் குறிப்புரையும் கைலாயமாலையின் ஆங்கில மொழி பெயர்ப்பாக திரு. அ முத்துத்தம்பிப்பிள்ளை அவர்களின் கட்டுரையும் இடம் பெற்றுள்ளது

111. **யாழ்ப்பாணத்தமிழரசர் வரலாறும் காலமும்**/ பொ. ஜெகந்நாதன் யாழ்ப்பாணம்: யாழ் இலக்கிய வட்டம்; 1 வது பதிப்பு, 1987. (யாழ்ப்பாணம்: ஆசிர்வாதம் அச்சகம்).

பக்கம்: XIV 167; மட்டை: நூல் இழை-குத்திக்கட்டல்; விலை: 30,-; அளவு: 42 X 26 ச மீ.

யாழ்ப்பாண இராசசியத்தின் வரலாறு புதிய கோணத்தில் ஆராயப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்தரசு 13 ஆம் நூற்றுண்டில் அல்ல, 8 ஆம் நூற்றுண்டில்தான் ஆரம்பமானதென்றும் கலிங்கமாகன் முதலாவது சிங்கையாரிய மன்னனல்ல அவனுக்கும் யாழ்ப்பாணத்துக்கும் தொடர்பில்லை என்றும் நல்லூர் கந்தவேள் கோட்டத்தை நிறுவிய புவனேகபாகுவும் செண்பகப் பெருமாள் புவனேகபாகுவும் ஒருவரல்ல வென்றும் இந்நூலின் ஆசிரியர் நிறுவமுனைந்துள்ளார்.

112 **விஷ்ணு புத்திரர் வெடியரசன் வரலாறு**/ மு. சு. சிவப்பிரகாசம். தொல்புரம்: அகில இலங்கை வெடியரசன் கலாமன்றம். 1 வது பதிப்பு, 1988. (வட்டுக்கோட்டை: கற்பக விநாயகர் அச்சகம், வட்டுமேற்கு)

பக்கம்: (24), 200; பின்னிணைப்பு 18 பக்கம், விளக்கப்படங்கள், வரைபடங்கள்; மட்டை: நூல் இழை - குத்திக்கட்டல்; விலை: 27 50; அளவு: 21 X 14 ச. மீ.

இலங்கைத் தமிழரிடையே காணப்படும் ஒரு சமுதாயப் பிரிவினரான முற்குகரிடையே வழங்கி வரும் நாட்டார் பாடல்களை அடிப்படையாகக் கொண்டு அமைந்த நூல.

# நூல் ஆசிரியர் அட்டவணை


அகளங்கன் 85, 92
அமுதன் 77
அன்பு முகையதீன் 71
அஸீஸ், அப்துல் பார்க்க அஸூமத், அல்
அஸூமத். அல் 63, 70
இரத்தினவிங்கம், கா. 94
உவைஸ், ம. மு. 54
கணபதிப்பிள்ளை, சி. 86
கணேசலிங்கம், இராஜராஜேஸ்வரி 110
கனகரட்ணு, ஏ.ஜே. 89
குணசேகரா, வீல் 82

குணராசா, க. 108
மேலும்பார்க்க
செங்கை ஆழியான்
குலவீத். U. L. M. 55
கைலாசபதி, க. 84
கோப்பாய் - சிவம் 59, 103
மேலும்பார்க்க
சிவானந்தசர்மா, ப.
சண்முகதாஸ், அ. 101
சண்முகலிங்கம், க. 97
சாரணாகையூம் 67
சாரல் நாடன் 99, 102
சாலி, J. M. 75
சார்ள்ஸ் 65
சித்திரலேகா, மௌ. 97
சிவகுமாரன், கே எஸ். 87
சிவப்பிரகாசம், மு. சு. 112
சிவராமலிங்கம்,
வேலணை 98
சிவலிங்கராஜா, S 106
சிவானந்தசர்மா, ப. 52
மேலும்பார்க்க
கோப்பாய் சிவம்.
செங்கை ஆழியான், 80, 81
மேலும்பார்க்க குணராசா, க.
சோமு, மாத்தளை 76
தர்மராஜா, நா. பார்க்க
அகளங்கன்
தளையசிங்கம், மு. 90
நடராஜன், பி. 110
நாகூர்கனி, S. I. 77
நிஃமத், S. H. 74
நித்தியானந்தன், வி. 58
நுஃமான், M. A 64, 68, 88
பாரி, F. M. நதீம் 54
பாலசுந்தரம், இ. 73
பிரமிள் 9ு
புன்னியாமின், 51
மரியசேவியர், நீ. 62
மலரன்பன் 76
மீராலெவ்வை, M I. M 53
முரளிதரன், சு. 66
முருகானந்தன், M.K. 61
மேமன்கவி. 100
மௌனகுரு, சி. 97
யோகநாதன், செ. 79
வடிவேலன், மாத்தளை 76
வித்தியானந்தன், சு. 93
வேலுப்பிள்ளை, ஆ. 104
வேலுப்பிள்ளை, சி.வி. 60, 83 109
ஜீவா, டொமினிக் 95
ஜெகந்நாதன், பொ. 111
ஜெமீல், S H. M. 57
ஜெயசிங், தேவதாசன் 91
ஜெயராசா, சபா 56
ஸபர், முஹம்மத் எம். 107
ஸமது, அ.ஸ.அப்துஸ் 78
ஹனிபா எஸ். எம். 96, 105
ஷரிபுத்தின் ஜின்னாஹ் 69, 72
ஷெரீப், ஜுனைதா. 82

## நூல் தலைப்பு அட்டவணை

*அட்டைப்பட ஓவியங்கள்* 95
*அல் அசுமத கவிதைகள் -*
*மலைக்குயில்* 63
*அவள் நெஞ்சுக்குத்தெரியும்* 77
*அழியாத நிழல்கள்* 64
*அறிவும் உணர்வும்* 53
*ஆசிரியரும் உளவியலும்* 56
*இலக்கியச் சிந்தனைகள்* 84
*இலக்கியத் தேறல்* 85
*இலக்கிய விருந்து* 51
*இலங்கை அரசியற்*
*பொருளாதார அபிவிருத்தி* 58

| | |
|---|---|
| உத்தமர் உவைஸ் | 96 |
| எயிட்ஸ் | 61 |
| எரிகொள்ளி | 74 |
| கம்பராமாயணக்காட்சிகள் | 86 |
| கலை இலக்கியத்திறனாய்வு | 87 |
| கலை முகம் | 62 |
| கல்லறை மேலான காற்று | 65 |
| கல்விச் சிந்தனைகள் | 57 |
| கனவுப் பூக்கள் | 78 |
| காணி, நிலம் வேண்டும் | 79 |
| காத்தவராயன் நாடகம் | 73 |
| கிடுகு வேலி | 80 |
| கூடைக்குள் தேசம் | 66 |
| கைலாஸ்: கைலாசபதி நினைவேடு | 97 |
| சாது அப்பாத்துரையின் தியான தாரா | 98 |
| சாயல் | 75 |
| சி.வி. சில சிந்தனைகள் | 99 |
| சிறுவர்பாட்டு | 67 |
| சைவ விரதங்களும் விழாக்களும் | 52 |
| டொமினிக் ஜீவா-கருத்துக்கோவை | 100 |
| தியானதாரா | 98 |
| திருக்கோணமலை | 94 |
| திறனாய்வுக்கட்டுரைகள் | 88 |
| துணை வேந்தர் வித்தி | 101 |
| தேசபக்தன் கோ.நடேசையர் ஒரு வரலாற்று ஆய்வு | 102 |
| தோட்டக் காட்டினிலே | 76 |
| நல்லை நகர் நூல் | 108 |
| நாடற்றவர் கதை | 109 |
| நொடியும் விடையும் II | 59 |
| பஞ்சாட்சரம் | 103 |
| பண்டிதமணி போற்றிய யாழ்ப்பாணத்துச் சைவத் தமிழ் பாரம்பரியம் | 104 |
| பலஸ்தீனக் கவிதைகள் | 68 |
| பாலையில் வசந்தம் | 69 |
| பிரளயம் | 81 |
| புலராத பொழுதுகள் | 70 |
| பெட்டிசம் | 82 |
| மகாகவி பாரதி | 105 |
| மலை நாட்டு மக்கள் பாடல்கள் | 60 |
| மாதுளம் முத்துக்கள் | 71 |
| மார்க்சியமும் இலக்கியமும் சில நோக்குகள் | 89 |
| முகம்மது (ஸல்) மனிதரில் தலை சிறந்தவர்கள் | 54 |
| முத்து நகை | 72 |
| முத்துராச கவிராயரின் கைலாய மாலை | 110 |
| முற்போக்கு இலக்கியம் | 90 |
| யாழ்ப்பாணத் தமிழரசர் வரலாறும் காலமும் | 111 |
| யௌவனம் | 91 |
| வாலி | 92 |
| வித்தியானந்தம் | 93 |
| வித்துவ சிரோமணி கணேசையரின்வாழ்க்கையும் பணியும் | 106 |
| விஷ்ணு புத்திர வெடியரசன் வரலாறு | 112 |
| வீடற்றவன் | 83 |
| ஜீவியப்பயணம் | 55 |
| ஸேர் றாசிக் பரீத்: வழியும் நடையும் | 107 |

நூலாய்வுக் குறிப்பு-

## கே. எஸ். சிவகுமாரனின் "கைலாசபதியும் நானும்"

பன்முகப் பரிமாணங்கள் கொண்ட கைலாசபதியின் ஆற்றல்களை ஒரு கைப்பிடிக்குள் கொண்டு வருதல் கடினம் என்று தெரிந்தும் அந்த முயற்சியில் சிவகுமாரன் ஈடுபட்டுள்ளார்.

'கைலாசபதியும் நூலாசிரியரும்'', ''கைலாசபதியின் அணுகு முறை'',''கைலாசபதியின் திறனாய்வும் குறையும்'',''அழகியலும் சமூகப் பண்பும்'' முதலிய தலைப்புகளில் நூலின் உள்ளடக்கம் அமைந்துள்ளது.

மார்க்ஸிய அறிகை முறையினூடாக கைலாசபதி இலக்கியங்களை அணுகினார். ஆனால் மார்க்ஸிய அறிகை முறையை ஒரு வரையறுத்த சட்டம் என்று எண்ணுவோரும் மாறாக அதன் இயங்கியற பண்பைக் கண்டறிந்தோரும் வெவ்வேறு கோணங்களிலே தான் கைலாசபதியைத் தரிசிக்க நேரிடுகின்றது. இந்தத் தோற்றப்பாட்டுக்கு சிவகுமாரன் விதி விலக்கானவர் அல்லர்

கைலாசபதி தொடர்பான ஓர்''அகலாங்கு நோக்காக''இந்நூல் அமைந்துள்ளது. மார்க்ஸிய விமர்சகர்களிடையே அழகியல் தொடர்பான கருத்து முரண்பாடுகள் உள்ளன. சோசலிச யதார்த்தவாதத்தை ஓர் இலக்கியக் கோட்பாடாக ஏற்பதா விடுவதா என்ற அபிப்பிராய வேறு பாடுகள் உள்ளன. இந்த முரண்பாடுகள் மார்க்ஸிய விமர்சகர்களின் குறைபாடுகளாக மாட்டா. மாறாக அவர்களின் ஆளுமையையும் இயங்கு நெறியையும் புலப்படுத்தும்.

கைலாசபதி ஆய்வில் ஒரு ''நெட்டாங்கு நோக்கு'' அவசியம் என்பது இந்நூலை வாசிக்கும் பொழுது ஒரு நெருடலாக அமையுமாயின் அதனை ஒரு நேர்முகத் தெறிப்பாகக் கொள்ளலாம்.

நேர் ஏற்றத்திலோ அல்லது எதிர் ஏற்றத்திலோ ஒருவர் கைலாச பதியை அணுகிச் சிறப்படைய முடியும்.

— சபா. ஜெயராசா, யாழ். பல்கலைக்கழகம்.

# அறிவித்தல்

தமது நூலை "நூல் தேட்டத்தில்" சேர்த்துக் கொள்ள விரும்பும் ஈழத்துத் தமிழ் நூல் எழுத்தாளர்கள், வெளியீட்டாளர்கள் நூலின் பிரதி யொன்றினை எமக்கு அனுப்பிவைக்கவும் 1980 ஆம் ஆண்டிற்குப் பின் வெளியிடப்பட்டவை மாத்திரம் தற்போது பதிவுக்கு ஏற்றுக்கொள்ளப் படவுள்ளது

சஞ்சிகைகள் வெளியிடுவோரும் தமது சஞ்சிகையின் இறுதியாக வெளிவந்த இதழ் ஒன்றுடன் சந்தா விபரம், ஆரம்பித்த திகதி சஞ்சிகை பற்றிய குறிப்பு ஆகியவற்றையும் எழுதி அனுப்பி வைக்கவும்

நூல் வெளியீட்டு விழா மற்றும் எழுத்தாளர்களுக்கும் வெளி யீட்டாளர்களுக்கும் பயனளிக்கக் கூடிய செய்திகளை அனுப்பினால் செய்திக்கோவை பகுதியில் பிரசுரிக்கப்படும்.

சிறப்புக்கட்டுரைப் பகுதியில் பிரசுரிப்பதற்கு ஆக்கங்கள் கோரப் படுகின்றன ஆக்கங்கள் யாவும் வெளியீட்டுத்துறையுடன் சம்பந்தப் பட்டதாகவும் குறித்த காலப்பகுதியில் வெளியிடப்பட்ட துறைசார் நூல்கள் பற்றிய தரமான ஆய்வுக் கண்ணோட்டங்களாகவும் இருத்தல் விரும்பத்தக்கது கையெழுத்துப் பிரதி ஆறு தட்டச்சுத் தாள்களுக்கு மேற்படாதவாறு அமைதல் வேண்டும்.

இந்த சஞ்சிகை வெளியீடு தொடர்பான கடிதங்கள் யாவும் சஞ்சிகையின் பின்புற அட்டையில் குறிப்பிடப்பட்ட ஆசிரியரின முகவ ரிக்கு அனுப்பி வைக்கப்படவேண்டும்.

---

"நூல் தேட்டம்" இதழில் பிரசுரிப்பதற்காக நூல் / சஞ்சி கைப் பிரதிகளை அனுப்பிவைத்தவர்களுக்குத் தனித்தனியாக பதில் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. தாங்கள் அனுப்பிவைத்த பிரசுரத்தைப் பெற்றுக்கொண்டமை தொடர்பாக எம்மிடமிருந்து இதுவரை பதில் கடிதம் கிடைக்கப்பெறாதவர்கள், தயவுசெய்து தாமதமின்றி எம்முடன் தொடர்புகொள்ளவும்.

காசோலைகள் / காசுக்கட்டளைகள் அனுப்புவோர் இயலுமான வரை அவற்றை ஆசிரியரின் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

— ஆசிரியர்

# இந்துமதி
## மாதாந்த சஞ்சிகை

*கொழும்பு, யூனியன் அச்சக நிறுவனத்திலிருந்து ஏப்ரல், 1990 முதல் வெளிவருகின்றது. இதன் ஆசிரியர்* நிர்மலன்தாஸ். துணை *ஆசிரியர்கள்* எம். நேசமணி, பா. தங்கம். *உள்நாட்டு, வெளிநாட்டு அரசியல்,* பொரு*ளாதாரம்,* இலக்கியம் *உட்பட பல்துறைசார் கட்டுரைகளையும்,* துணுக்குகளையும் *தாங்கி வெளிவருகின்றது.*

தனிப்பிரதி: ரூபா 15/- ஆண்டுச் சந்தா: 180/-

*முகவரி.* இந்துமதி,
தபால் பெட்டி எண் - 362
கொழும்பு.

விற்பனையாகிறது! ஏழாவது இதழ்!!

தேயிலைக்கு பசுமையையும்
தேநீருக்கு சாயத்தையும் தந்த
மக்களைப்பற்றிய
இலக்கிய சஞ்சிகை

# கொழுந்து

ஆசிரியர்: அந்தனிஜீவா

விபரங்கட்கு: மலையக வெளியீட்டகம்
57, மகிந்தபிளேஸ்
கொழும்பு - 6

('கொழுந்து' சஞ்சிகையின் ஏற்கனவே வெளிவந்த ஆறு இதழ்களின் 'பைண்ட்' தேவைப்பட்டவர்கள் ரூபா 50/- அனுப்பி பெற்றுக்கொள்ளலாம்.)

# NOOL THETTAM

## A Quarterly Bibliography

Vol. 1
No. 2
July 1990

*Editor:*
N. Selvarajah

*Publishers:*
Ayothy Library Services,
Anaicoddai
Jaffna, Sri Lanka

*Subscription:*
Single Copy Rs. 10/-
Annual Subscription 40/-
(Postage included)

*Correspondence:*
N. Selvarajah
Librarian
Evelyn Rutnam Institute
University Lane, Thirunelveli
Jaffna.